# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.
## S.C. 40/2024
## Prosecution Witness : 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. முருகன் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. வெள்ளையன் | **Calling** | : | |
| **Village** | : | பழனிபட்டி, செந்துரை, நத்தம் | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | **40** |
| | | | **Dated** | : | **19.08.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 4), **திரு. முருகன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 24.02.2019ம் தேதி எங்கள் ஊர் பழனிபட்டியில் காதுகுத்து விழா நடைபெற்றது. ஆஜர் எதிரி மற்றும் சரிதா, நந்தினி ஆகியோர் இருந்தனர். விழா முடிந்து செந்துரையில் இருந்து மனக்காட்டுர் பஸ் ஏற்றி விடுவதற்காக ஆஜர் எதிரி அவரது இருசக்கர வாகனத்தில் எதிரி ஓட்ட சரிதா மற்றும் நந்தினி ஆகியோர் பின்புறமாக அமர்ந்து சென்று கொண்டு இருந்தபோது, அடைக்கனூர் அருகே மேற்படி இருசக்கர வாகனம் பள்ளத்தில் விழுந்துவிட்டது. அதில் நந்தினி மற்றும் சரிதா இருவருக்கும் காதில் இருந்து இரத்தம் வந்தது. பின்பு ஆம்புலன்ஸ் மூலம் நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள். அதில்

சரிதா மருத்துவமனைக்கு கொண்டு வந்த பிறகு இறந்துவிட்டார். அங்கு போலீசார் வந்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கு விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். காதுகுத்து விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு அலைபேசி மூலம் தகவல் கிடைத்துத்தான் சம்பவ இடத்திற்கு போய் பார்த்தோம் என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸில் காயம்பட்ட நபர்களை ஏற்றிக் கொண்டு போனபிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். 108 ஆம்புலன்ஸில் காயம்பட்ட நபர்களை ஏற்றி அனுப்பும் பொழுது போலீசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள். போலீசார் சம்பவ இடத்தில் இருந்த அனைவரையும் விசாரிக்கும் போது என்னையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். இந்த விபத்து எப்படி நடந்தது, யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரி, சரிதா, நந்தினி அனைவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலீசார் என்னை வழக்கின் சாட்சியாக சேர்த்ததனால் நான் நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் தற்போது சொன்ன இதே விபரங்களைத் தான் சொன்னேன் என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on 19.08.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.